Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. MC. No. 18/2023
DEPOSITION OF PETITIONER SIDE WITNESS – 1

| | | | |
|---|---|---|---|
| Name: | ஞானம்மாள் | Calling: | இல்லத்தரசி |
| Father's Name: | மணி | Religion: | |
| Village: | புருசோத்தமகுப்பம் | Age: | 45 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 27.03.2026 நேரம் : 05.10 PM

(எதிரி ஆஜர் . )

ம.சா.1 எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை

எனக்கு திருமணம் ஆகி எத்தனை வருடம் ஆகிறது என்றால் 22 வருடம் ஆகிறது. தற்போது எனக்கு என்ன வயதாகிறது என்றால் 45. எதிர்மனுதாரர் வயது தெரியாது. சுமாராக அவருக்கு 70–75 வயதாகுமா என்றால் ஆகும். எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை வருடமாக எதிர்மனுதாரர் உடன் சேர்ந்து வாழ்ந்து வந்தேன் என்றால் என் மகன் 9 ம் வகுப்பு படிக்கும் வரை சேர்ந்து வாழ்ந்து வந்தேன். நான் மாராப்பட்டு சூகம்பெனியில் வேலை செய்து வந்தேனா என்றால் ஆமாம். அப்போது எனக்கு மாத வருமானம் ரூ.4,500 என்றால் சரிதான். என் மகன் சஞ்சய்க்கு என்ன வயது ஆகிறது என்றால் 20 வயது. என் மகன் வேலைக்கு செல்கிறாரா என்றால் இல்லை. நான் எத்தனை வருடமாக எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து வாழ்கிறேன் என்றால் 7 வருடமாக பிரிந்து வாழ்கிறேன். நான் சொல்வது தவறு என்றாலும் அவரை விட்டு நான் 19 வருடமாக பிரிந்து வாழ்கிறேன் என்றாலும் சரியல்ல. இடைப்பட்ட காலத்தில் சேர்ந்து வாழ எதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்தேன், வழக்கறிஞர்கள் பாபு,

ரமேஷ் மூலம் காவல் நிலையத்தில் சென்று பேசினேன். சேர்ந்து வாழ்வது சம்மந்தமாக நீதிமன்றத்தில் எதாவது மனுத்தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை குறித்து இந்த வழக்கில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. என் திருமணத்தின் போது என் அண்ணன்கள் 71/2 சவரன் நகை போட்டுள்ளார்கள் என்று கூறியுள்ள நிலையில் என் அண்ணன் என்ன வேலை செய்கிறார் என்றால் பூக்கடை வைத்துள்ளார். பூக்கடை வைத்துள்ளவர்களுக்கு 71/2 சவரன் நகை போட்டும் அளவிற்கு வருமானம் வருமா என்றால் ஆடு, மாடு விற்றும் போட்டார்கள். நான்கு மாதம் கழித்து என்னை தனிக்குடித்தனம் எங்கு வைத்தார் என்றால் அவரது வீட்டு மாட்டுக்கொட்டையில் வைத்தார். ரூ.1000 வாடகைக்கு உள்ளது யார் வீடு என்றால் எதிர்மனுதாரரின் சித்தப்பா வீடு. நான் என்ன வேலை செய்து சேமித்து வைத்திருந்த பணத்தைக்கொண்டு என்னை பராமரித்துக்கொண்டேன் என்றால் என் அப்பா கொடுத்த பணத்தை வைத்து பராமரித்துக்கொண்டேன். நான்கு லட்சம் கடன் எதிர்மனுதாரர் பெற்றிருந்ததை நான் தீர்த்தேன் என்று சொல்லியுள்ள நிலையில் அதை யார் யாரிடம் எப்படி பெற்றார்கள் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். இரண்டு வீடு கட்டினார்கள் என்று சொல்லியுள்ள நிலையில் அது யார் பெயரில் உள்ளது என்றால் என் கணவர் பெயரில் உள்ளது. என்னை எதிர்மனுதாரர் வீட்டை விட்டு துரத்திவிட்டார் என்று சொல்லியுள்ள நிலையில் எந்த தேதியில் எந்த வருடத்தில் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சுமார் 7 வருடத்திற்கு முன்பு. என்னை வீட்டை விட்டு துரத்தியது சம்மந்தமாக போலிசாரிடம் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு அல்சர், வயிற்று பிரச்சனை , உடல் பிரச்சனை உள்ளது என்று சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமான மருத்துவ அறிக்கை ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் போட்டுள்ளேன்.எதிரிக்கு இருதய நோய் கோளாறு மற்றும் கண் பார்வை கோளாறு , வயது முதிர்வினால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர் வேலை செய்யும் செங்கல் சூலையின் உரிமையாளர் யார் என்றால் என் மச்சினர், கூட்டாக உள்ளது. ஒரு செங்கல் அறுத்தால் எவ்வளவு கூலி என்றால் 1ரூபாய், எவ்வளவு ஒரு நாளைக்கு சம்பாதிக்கலாம் என்றால் 700 ரூபாய் சம்பாதிக்கலாம். 158/ 4 B என்ற சர்வே நம்பரில் அவருக்கு சொத்திருப்பதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த சொத்துக்கள் தற்போது சுரேஷ்,மோகன், கோவிந்தராஜ் பெயரில் உள்ளது

என்றால் சரிதான். 2005 ல் எதிர்மனுதாரரின் அப்பா உயில் மூலமாக எழுதிவைத்த சொத்து என்றால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. 19 வருடமாக எந்த ஒரு காரணமும் இன்றி நான் தனியாக பிரிந்து வாழ்கிறேன் என்றாலும் எந்த ஒரு தொடர்பும் இன்றி தன்னிச்சையாக வாழ்ந்து வருவதாலும் என்னை பராமரித்து கொள்ள போதுமான அளவு வருமானம் நான் ஈட்டி வருவதாலும் எதிர்மனுதாரர் எந்த வகையான ஜீவனாம்சமும் தர கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல. என் மகன் என்னுடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் தவறான காரணத்தை குறிப்பிட்டு ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ஞானம்மாள்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K